# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.

# O.S.No.228/2013

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் நாள் பிரதிவாதியின் சாட்சிய வாக்குமூலம் இந்நீதிமன்றத்தால் ஆணையிட்டு 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திரு.புஷ்பராஜ், இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | **ராஜேந்திரன்** | தொழில் |
| தந்தை பெயர் | அப்பாசாமி | கிராமம் |
| வயது | | வட்டம் |
| நேரம் | 12.50 | |

**பி.வா.சா.1 குறுக்குவிசாரணை**

**A.** வழக்கு சொத்தை தன் இடம் என்று கேட்டு இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். தடை உத்தரவு ஏதும் கேட்டு வழக்கை தொடுக்கவில்லை. வழக்கு சொத்து கிழக்கு மேற்கு 210 அடி வடக்கு தெற்கு 32 அடி ஆகும். வழக்கு சொத்து ஆதியில் யார் பெயரில் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் 13 ½ சென்ட் எனது தகப்பனார் அப்பாசாமி என் பெயருக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார். எனது தகப்பனாருக்கு அவரது அம்மா வழியாக சொத்து கிடைத்தது.

**B.** எனது தாத்தாவான சின்னதம்பி நாயக்கருக்கு 2 மனைவிகள் அன்னம்மாள் மற்றும் கருப்பாயி அம்மாள். தாவா சொத்து அன்னம்மாள் மற்றும் கருப்பாயி அம்மாளுக்கு சொந்தம் என்றும் கூறும் பட்சத்தில் அதற்கான வருவாய் ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது தாத்தாவான சின்னதம்பி நாயக்கரின் மாமியார் சொத்து என்று கூறும் பட்சத்தில் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**C.** இதே வழக்கு சொத்தை குறித்து நானும் நிர்மலா என்பவரும் இணைந்து அசல் வழக்கு ஒன்றை பழனி, சந்திரன் மற்றும் லலிதா பெயரில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் தற்போது ஞாபகத்தில் இல்லை. அந்த வழக்கு முடிவின் விவரம் தெரியாது. அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. நான்தான் உரிமையாளர் என்றும் மேலும் தடை உத்தரவு கேட்டு மேற்சொன்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கை எதிர்த்து மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த விவரம் தெரியும் அந்த மேல்முறையீட்டு வழக்கு எண் 53 ஆகும் வருடம் ஞாபகத்தில் இல்லை. அந்த மேல்முறையீட்டு வழக்கின் முடிவு என்ன என்று எனக்கு தெரியவில்லை. அந்த மேல்முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. அந்த வழக்கை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தேன் என்றால் சரிதான் அதன் வழக்கு எண் தற்போது ஞாபகத்தில் இல்லை.

**D.** சார்பு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விவரத்தை வழக்கறிஞர் படித்துக்காட்டவில்லை. மேல் சொன் அசல் மற்றும் மேல்முறையீட்டு வழக்குகளின் புல எண் 664/4 ஆகும். அந்த புல எண்ணிற்கு நான் உரிமையாளர் இல்லை என்று நீதிமன்றங்கள் உத்தரவு

பிறப்பித்துள்ளது என்றால் சரிதான். அன்னம்மாள் மற்றும் கருப்பாயி அம்மாள் பெயரில் உள்ள பட்டா தற்போது வாதியின் பெயரில் உள்ளது. நான் சிட்டா பெற செல்லும்போதுதான் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்ட விவரத்தை தெரிந்து கொண்டேன். அதன் பேரில் வருவாய் துறையிலோ நீதிமன்றத்திலோ நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சொத்து எனக்கு சொந்தமானது இல்லை என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அதை நான் மறுக்கிறேன்.

**E.** 1991ம் ஆண்டில் இருந்து பிள்ளையார் கோவில் தெரு, மேட்டு பரந்தூரில் வசித்து வருகிறேன். அதற்கு முன்பு புல எண் 664/4ல்தான் வசித்து வந்தேன். புல எண் 664/4ல் என்கு உரிமை இல்லை என்று உத்தரவு பிறப்பித்தப்பின் அங்கே வசிகக உரிமை இல்லை என்று சொன்னால் நான் ஏற்கனவே வசித்து வந்தேன் தற்போது இல்லை. எதற்காக வீடு மாற்றம் செய்தீர்கள் என்றால் மழை காரணமாக வீடு சேதம் அடைந்ததால் மாறிவிட்டேன். 1991ம் ஆண்டிற்கு முன்பு வசித்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளீர்களா என்றால் வாய்தா ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். அது எந்த ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டது என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

Sd./-Saranya Selvam
Additional District Munsif,
Kancheepuram.